மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ராமு | நாள் | 05.01.2023 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

20. ஓலைப்பட்டி கிராமம் ச.எண்.248/1A1 ஆனது எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் 53 1/4 செண்ட் விஸ்தீரணம் உள்ளது. மேற்படி நிலமானது யாருடைய பெயரில் உள்ளது என்றால் என் தந்தை அம்மாசியின் பெயரிலுள்ளது. என் வழக்குரையில் மேற்படி சர்வே எண்ணில் 74 செண்ட் நிலம் சித்தன் என்பவரது பெயரில் உள்ளது தவறானது என்றால் சரியல்ல.

21. ஓலைப்பட்டி கிராமம் ச.எண்.248/1A2 ன் மொத்தம் எத்தனை விஸ்தீரணம் கொண்டது என்றால் அதுபோன்ற சர்வே எண்ணே எனக்கு தெரியாது. மேற்படி ஓலைப்பட்டி கிராமம் ச.எண்.248/1A2 வை பற்றி என் வழக்குரையில் ஏதேனும் சங்கதிகள் நான் சொல்லியுள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகம் இல்லை. சின்னபையன் என்பவர் என் பெரியப்பா.

22. வழக்குரையில் என் பெரியப்பா சின்னபையனை பற்றியும், அவரது குடும்பத்தை பற்றியும், அவரது சொத்து குறித்தும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் பெரியப்பா குடும்பத்திற்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்துகள் பாத்தியப்பட்டது என என் வழக்குரையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சர்வே எண் சரியாக எனக்கு நினைவில்லை. ஆனால் 74 செண்ட் நிலம் அவர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என சொல்லியுள்ளேன்.

23. அவ்வாறு என் வழக்குரையில் சின்னபையன் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டுள்ளது என சொல்லியுள்ள சங்கதிக்கு பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரையில் என்ன மறுப்புரை தெரிவித்துள்ளனர் என நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என் பெரியப்பா சின்னபையன் குடும்பத்திற்கு ச.எண்.248/1A2 ல் 70

செண்டுகள் நிலம் தான் உண்மையில் பாத்தியப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி சங்கதி எனக்கு நன்கு தெரியும் என்றாலும், மேற்படி சங்கதியை அவர்களது பதிலுரையில் குறிப்பாக தெரிவித்துள்ளனர் என்றாலும், தற்போது வழக்கிற்காக பதிலுரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

24. அம்மாசியின் பெயரில் ச.எண்.248/1A3 ல் எவ்வளவு நிலம் கிரயம் பெறப்பட்டது என்றால் 53 1/4 செண்ட் கிரயம் பெறப்பட்டது. அதே சர்வே எண்ணில் சித்தன் பெயரில் எவ்வளவு நிலம் கிரயம் பெறப்பட்டது என்றால் 1 ஏக்கர் 6 1/2 செண்ட் நிலம் கிரயம் பெறப்பட்டது. மேற்படி இரண்டு சொத்துகளும் 19.05.1987 ம் வருடத்திய பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தின் மூலம் ஒன்றாக கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான்.

25. ச.எண்.248/1A3 ல் 18 ம் பிரதிவாதி பழனி என்பவர் எவ்வளவு நிலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் 53 1/4 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார். பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் பழனி என்பவர் பத்திர எண்.448/1987 ன்படி மேற்படி சர்வே எண்ணில் கிரயம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளனர் என்றால் சரிதான்.

26. இன்றைய தேதியிலிருந்து எங்களுடைய மூதாதையர் சித்தன் இறந்து சுமார் 22 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். 1, 10, 13 பிரதிவாதிகளின் தந்தை தான் மேற்படி சித்தன் என்றால் சரிதான். 7, 9 பிரதிவாதிகளின் தந்தைவழி பாட்டனார் தான் மேற்படி சித்தன் என்றால் சரிதான். ச.எண்.248/1A3 ல் உள்ள 1 ஏக்கர் 6 1/2 செண்ட் நிலத்தையும், ச.எண்.248/1A1 ல் உள்ள 74 செண்ட் நிலத்தையும் மேற்படி சித்தன் வகையறா தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.